தொகுதி-7 எண் 1
Vol. 7 No. 1
மார்கழி-பங்குனி 2050
January - March 2019
ISSN : 2321-0737

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandrasegaran*

***Editorial Board***
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Selva Kumar*
*Mr. D. Alagudurai*
*Dr. J. Raja*
*Dr. Chandrika Subramaniyan*
*Mr. G. Senthil*

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

19 பகுதி-1 Part -1

தொகுதி-7 எண்-1
Vol. 7 No. 1
மார்கழி-பங்குனி 2050
January - March 2019
ISSN : 2321-0737


| | | | |
|---|---|---|---|
| 1. | ம.பிரேமா | சங்க இலக்கியத்தில் மீன் | 1-5 |
| 2. | ந.சிவா | சங்க இலக்கியப் புலவர்கள் வாழ்ந்த பகுதிகளை அறிதல் | 6-15 |
| 3. | ஜே. கா. கமலா | நன்னூலில் கல்விச் சிந்தனைகள் | 16-19 |
| 4. | க. அ. அன்னையப்பன் | தொண்டைநாட்டுக் குடியிருப்புக்கள் (வீடுகள்) | 20-22 |
| 5. | க.ஜெனிபர் | இன்னா நாற்பது இனியவை நாற்பது உணர்த்தும் நட்பு | 23-28 |
| 6. | க. அரும்பு | கணியன் பூங்குன்றனாரின் தேசிய ஒருமைப்பாடு | 29-31 |
| 7. | இரா.அலெக்ஸாண்டர் | இலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள் | 32-36 |
| 8. | ச. ஜான்சி | குறுந்தொகையில் பறவைகள் | 37-39 |
| 9. | அ.கார்த்திகாதேவி | தலைவனின் தகவல் தொடர்புத்திறன் | 40-42 |
| 10. | அ.எழிலரசி | ஐங்குறுநூற்றில் மரங்கள் | 43-47 |
| 11. | சகோ. பி.ரெஜினா | புறநானூற்றில் ஐவகை நிலங்கள் | 48-60 |
| 12. | ச.ஈஸ்வரன் | பட்டினப்பாலை காட்டும் புகார் நகரம் | 61-65 |
| 13. | G. PRABHU | AWARENESS ON INTELLECTUAL PROPERTY RIGHTS AMONG STUDENTS | 66-73 |
| 14. | P. SIVABHARATHIRAJA | WOMEN EMPOWERMENT AND ECONOMIC REFORMS OF HIGHER EDUCATION | 74-82 |
| 15. | MANOHARAN. S. | THE WORLD HAVE BENEFITTED BY THE PRACTICE OF ASTANGA YOGA AND YOGA SUTRA OF PATHANJALI | 83-101 |
| 16. | ந.ரேகா | திணை வாழ்வியலில் முல்லை நில மக்களின் அகப்புற நெறிமுறைகள் | 102-105 |
| 17. | கு. உத்தமன் | மாணிக்க வாசகரின் சைவ சமயச் சிந்தனைகள் | 106-110 |
| 18. | இரா.முனோன்மணி | கலைக்கதிர் இதழில், கலைச்சொற்கள் | 111-113 |
| 19. | வே.கோமதி | குறிஞ்சி நில மக்களின் இல்லற நெறிகள் | 114-116 |
| 20. | பொ. அமின்யா | திறனாய்வு நோக்கில் - புறநானூற்றில் பெண்நிலை | 117-122 |
| 21. | கு. பாலமுருகன் | ஐங்குறுநூற்று பாலைத்திணையில் சூழலியல் | 123-126 |
| 22. | தே.கரோலின் | பழமொழிகள் | 127-130 |
| 23. | ஜோ.ஜோனிகா ஹேம்லட் & ஜெயஸ்ரீ | ஒளவையார் பாடல்களில் வினை உவமை | 131-133 |
| 24. | இரா. உத்தமி | ஊடகவியல் | 134-138 |
| 25. | அ.மகாலெட்சுமி | சங்க இலக்கியம் காட்டும் வாழ்வியல் | 139-144 |
| 26. | அ.லதா | சிலப்பதிகாரத்தில் பயணம் | 145-150 |
| 27. | பூ.கலைவாணி | புறநானூற்றுப் புலவனும் புலமையும் | 151-155 |
| 28. | செ.ஜான்சி | திருக்குறள் காட்டும் அறிநெறி | 156-158 |
| 29. | அ.இராஜேஷ் | சேக்கிழார் காட்டும் வாழ்வியல் நெறிகள் | 159-163 |
| 30. | சா. மனோகரி | சங்க இலக்கியத்தில் தாய்மை | 164-170 |
| 31. | கா. புனிதா | புறநானூற்றில் மறவர்கள் | 171-173 |
| 32. | இல.பிரவீன் பீற்றர் ஞானையா | திருக்குறள் காட்டும் பண்பாட்டு கூறுகள் | 174-176 |
| 33. | ர.மங்கையர்க்கரசி | சங்க கால வேளாண்மை தொழிலில் மகளிரின் பங்கு | 177-181 |
| 34. | க.கலைச்செல்வி | சிலப்பதிகாரத்தில் தோல் வணப்பு | 182-185 |
| 35. | கு.சின்னப்பன் | சங்ககால மக்களின் இயற்கையோடு ஒன்றித்த வாழ்வு | 186-190 |
| 36. | பெ.கவிதா | சிலப்பதிகார கவுந்தியடிகளின் சிறப்புகளும் சமண சமயத்தின் மாண்புகளும் | 191-196 |
| 37. | கா.ஆறுமுகம் | சவ்வாதுமலை வாழ் மக்களின் சமுதாய அமைப்பு முறையும் பொருளாதாரமும் | 197-205 |
| 38. | சா.யோகச்சந்திரன் | அறநூல்கள் உணர்த்தும் மானிடப்பண்பு | 206-209 |
| 39. | மா.தமிழ்ச்செல்வி | நற்றிணையில் தோழி வரைவுகடாதல் | 210-213 |
| 40. | நி. இராதிகா | அகமாந்தர்களில் செவிலி - நற்றாய் | 214-218 |
| 41. | இரா.ரேணுகாதேவி | சிலப்பதிகார உரையில் வெளிப்படும் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் இலக்கணப் புலமை | 219-221 |
| 42. | தி. பிரகாசி மேரி, இர. ஜான்ஸி ராணி, ச. பானுமதி | அறக்கொள்கைகளும் கால மாற்றமும் | 222-225 |
| 43. | பா.தங்கமணி & இரா.சிவகுமார் | வள்ளலார் உணர்த்தும் சாகாக் கல்வி | 226-228 |
| 44. | பா. ஜெயசீதா | அகநானூற்றில் விழாக்கள் | 229-232 |
| 45. | வலிவலம் வெங்கட்ராமன் | தோடி இராகத்தில் சத்குரு தியாகராஜரின் ஆதிதாளக் கீர்த்தனைகள் | 233-243 |
| 46. | செ. ரெஜினா | வள்ளுவர் வழங்கும் சமுதாய அறம் | 244-253 |
| 47. | தே. அனித்தா மேரி | சங்ககாலப் போரும் சடங்குகளும் | 254-259 |
| 48. | கு. சீனிவாசன் | கபிலர் பாடிய புறத்திணை அரசர்கள் | 260-264 |
| 49. | க. வீரத்தமிழன் | குறுந்தொகையில் தோழி கூற்று | 265-269 |
| 50. | த. கீதாஞ்சலி | சங்க இலக்கியத்தில் வேளாண்சார் அறிவியல் தொழில்நுட்பங்கள் | 270-273 |
| 51. | த. கலாஸ்ரீதர் | தொகை நூல்களின் தொகுப்பு முயற்சியின் தேவை | 274-278 |


Published by : **Raja Publications**, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House**, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# வள்ளுவர் வழங்கும் சமுதாய அறம்

முனைவர் செ. ரெஜினா
உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம், தமிழ்நாடு, இந்தியா

**முன்னுரை:**

உலகம் தோன்றியது முதல் இன்று வரையிலும் மனிதர்களை நல்லொழுக்கப் பாதைக்கு வழிநடத்த பலவிதமான சமூக நிறுவனங்களும், தத்துவவாதிகளும் முயன்று வருகின்றனர். எனினும் ஒழுக்கப் போதனைகள் என்பது உலகம் முழுமைக்கும் பொதுவான ஒன்றாகவே உள்ளன. அந்த அடிப்படையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட தமிழனின் தத்துவ நூலாகிய திருக்குறள் மனிதர்களுக்கு ஒழுக்கத்தைப் போதிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழரின் அறவாழ்வைக் காட்டும் நூல்களில் திருக்குறளின் பங்கு மிகவும் உயரியது. திருக்குறள் சமூகத் தளத்தில் நின்று பாடப்பட்டது எனினும், உலகனைத்திற்கும் பொதுவான தன்மைகள் மிகுதியாக உள்ளன. கடுமையான குறிக்கோள்களை நடைமுறைக்கு ஒவ்வாத நிலையிலிருந்து பேசாமல், வாழ்க்கையை உயர்ந்ததாகவும், இனியதாகவும் ஆக்கிக் கொள்வதற்குப் பயன்படும் ஒரு பண்பாட்டு வழிகாட்டியாய் திருக்குறள் விளங்குகின்றது. சமுதாயத்தில் மக்கள் தத்தம் விருப்பத்தின்படியே வாழ்வதற்குரியவரல்லர். அனைவரும் தம் பொறுப்புணர்ந்து வாழ்தற்குரியவரே. இல்வாழ்வார் பிறரைப் பழித்தலாகாது என்பதை உணர்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவன் பிறர் பழிக்காதபடி குடும்பத்தை நடத்தல் வேண்டும். மனைவி நற்செயல் காக்க வேண்டும். மகன் "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்ற புகழ்ச் சொல்லை உருவாக்க வேண்டும். திருக்குறள் முழுவதிலும் மக்கள் பிறர் எண்ணுவதை, பிறர் கூறுவதைக் கவனித்து நடக்க வேண்டியவர்களே என்ற கருத்தை வள்ளுவர் வலியுறுத்துகிறார். சமுதாயத்தில் மக்கள் தம் பொறுப்பை உணர்ந்து தம்மால் பிறர்க்குத் துன்பம் ஏற்படாது காத்துத் தம்மால் பிறருக்குச் செய்யத்தக்க நன்மையைச் செய்து வாழ்வதே சமுதாய அறமாகக் கருதப்படுகிறது.

குடும்பத்தில் யாவரும் தத்தம் கடமையைச் செய்ய வேண்டியவராயினும், சிலர் சிறப்பாகக் குடும்பப் பாரத்தைத் தாங்கவும் குடும்பத்திலுள்ள பிறருக்காக உழைக்கவும், தம் நலத்தைத் துறக்கவும் முன் வருவர் என்பதை "குடிசெயல் வகையுள்" கூறப்பட்டுள்ளது. அவ்வாறே சமுதாயத்தில் யாவருக்கும் தம் பொறுப்பைச் சிறப்பாகச் செய்வதை சமுதாயப் பண்புடையோர் எனவும், சான்றோர் எனவும் போற்றப்படுவர். மேலும் ஈகை முதலியனவற்றால் வறுமைத் துன்பத்தை நீக்குவதுடன், "தம் சொல்லாலும் செயலாலும் முன் மாதிரியாலும் பிறருக்கு நலம் பயப்பர். அவர்தம் நற்செயல்கள் எல்லைக்குட்பட்டன" என்று காமாட்சி ஸ்ரீனிவாசன், 'குறள் கூறும் சமுதாயம்', ப.168ல், கூறப்பட்டுள்ளது. மேலும் எல்லா நன்மைகளையும் செய்ய விழைவர் என்பதையே,

"கடன்என்ப நல்லவை எல்லாம்
கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"
-981

என்று குறள் கூறுகிறது. பிறர் தீமைகளைச் செய்தாலும், தம் இனிய சொற்களாலும்,

இயல்பினாலும், பண்பினாலும், யாவரிடத்தும் அன்பு உடையவராக இருந்து சமுதாய ஒழுங்கு நிலைத்திருக்க நன்னிலையில் நல்வழிப்படுத்துவர். எனவே வாழ்க்கைக்கு உறுதி சேர்ப்பது அறமாகும் என்பது பற்றி வள்ளுவர் வழங்கும் குறட்பாக்கள் வழி இக்கட்டுரையில் காண்போம்.

## அறத்தின் அடிப்படைப் பயன்

அறம் என்பது மனித இனத்தைப் பண்படுத்தும் ஒரு ஆத்ம சாதனம். இது சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனிடமும் பின்னிப்பிணைந்து காணப்பட வேண்டிய ஒன்று. அதன் வழி இனம், மொழி, சமயம் கடந்து அரிய செய்திகளை உலகிற்கு அளித்துள்ளன. இருட்டுக்கு ஒரு நிறம் வெளிச்சத்திற்குப் பல நிறம் என்பது போல அறக்கருத்துக்கள் நிறைந்த திருக்குறள் வெளிச்சத்தின் பல்வேறு நிறங்களாக மிளிர்கின்றன.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" -314

என்னும் குறளுக்கு ஏற்ப நமக்குத் தீங்கு செய்பவர்களுக்கும் நன்மை செய்து வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கை பயனுள்ளதாய் அமையும் என்ற அறச்சிந்தனையைத் தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் தனக்குத் துன்பம் செய்பவருக்கும் நன்மையே செய்யும் குணம் என்பது மனப்பக்குவம் அடைந்த சிலருக்கு மட்டுமே பொருந்தும். இதனையே வள்ளுவரும் நமக்குத் தீமை செய்பவருக்கு அவரே நாணும்படியாக நாம் நன்மை செய்ய வேண்டுமென்று விரும்புகிறார். மேலும் நமக்குத் துன்பம் செய்பவரிடமும் பொறுமையைக் காட்ட வேண்டும் என்பதை நிலமகள் நமக்குக் கற்றுத் தருகிறாள்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத்
தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"-151

அறம் நடைமுறை வாழ்க்கையின் உள்ளத்தின் அடிப்படையாகும் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ்
செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" - 656

என்ற குறளில் சான்றோர் அறத்தை உணர்த்தவும் உணரவும் வல்லவரென்பதை, அவர் விரும்பாததை விலக்குவதன் மூலம் அறியலாம் எனக் கூறுகிறார். வள்ளுவர் உலகத்தின் ஒப்புதலையும் சான்றோரின் விருப்பையும் அறத்திற்கு ஆதாரமாகக் காட்டவில்லை. வேறு சில ஆதாரங்களையும் தருகிறார்.

"தன்நெஞ்(சு) அறிவது பொய்யற்க்
பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்"- 293

ஒருவன் தெரிந்து பொய் கூறுவானாகில் அவனுள்ளமே அவனை வாட்டும். சான்றோரும் உலகமும் அவன் செய்தவற்றை அறியா நிலையிலும் "நீ செய்தது அறமன்று" என உள்ளச் சான்று அவனுக்கு எடுத்துக் காட்டுகிறது. மேலும் அறத்திற்கு அடிப்படையான உள்ளச்சான்று சமுதாயத்தின் ஒப்புதலா, சான்றோர் கருத்தா, பெரியோரால் இயற்றப் பெற்ற அற நூல்களா? என வினவின் இவையாவும் அறத்தை உணர்த்த உதவுகின்றன எனலாம். மேலும் திருக்குறளிலுள்ள 133 அதிகாரங்களுள், 70 பொருட்பாலிலேயே அடங்கும். பொருட்பாலில் ஒழிபியலாக அமையும் 13 அதிகாரங்களைத் தவிர, மற்றவை அரசியலையும், அங்கவியலையும் கூறுகின்றன. அமைச்சனும் அரசர் முதலிய அலுவலரும் சிறந்த முறையில் தம் பணிகளைச் செய்தல் வேண்டும். அறன், படை முதலியவை நன்முறையில் அமைய வேண்டும் என்பதைக் குறித்து வள்ளுவ அதிகக் கவலை கொண்டார். நாட்டு நன்மைக்காக வீரர் உயிரிழக்கவும் துணித

வேண்டும். அறமானது அரசனின் அல்லது நாட்டின் நலத்தைப் பேணுபவனே அமைச்சனாகக் கொள்ளத் தகுந்தவன் என்றெல்லாம் கூறப்படும்போது நலம் பேணப்படுகிறது.

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து"-780

என்ற குறள் இருவருக்கும் இருக்க வேண்டிய மனநிலையைக் கூறுகிறது. வீரன் நாட்டிற்காகவோ அரசனுக்காகவோ தன்னுயிரை அளிக்கலாம். அரசன் வீரனின் கடமையெனக் கவலையற்றிராது, "இவ்வீரன் இறந்தானே" என வருந்திக் கண்ணீர் சிந்த வேண்டியவனே. தனிப்பட்ட ஒவ்வொரு வீரனின் உயிரும், அரசன் பார்வையில் அருமையாக இருக்க வேண்டியதே என்ற கருத்தைக் கூறுகிறார்.

"அன்றறிவாம் என்னா(து) அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை" -36

என்ற குறளின் மூலம் புலப்படுத்துகிறார்.

**வள்ளுவர் விரும்பும் சமுதாய அறம்:-**

மனிதனையும் சமுதாயத்தையும் செந்நெறிப்படுத்தும் ஒழுக்க நெறி அறம் எனப்படுகிறது. அறம் குறிக்கும் பொருள்கள் பலவெனினும் 'நற்பண்பு' என்னும் பொருளிலேயே வழங்கி வந்துள்ளது. குறளிலும் அப்பொருளே மேற்கொள்ளப்பட்டது. வள்ளுவர் அறத்தைக் கூறுங்கால் சமுதாயத்தின் நலத்தையும் உள்ளத்தில் கொண்டார். தனிப்பட்டோரின் இவ்வுலக வாழ்க்கை வளத்தையும் கருதினார். தனிப்பட்டோரின் அற முன்னேற்றத்தைக் குறித்தும் எண்ணினார். வள்ளுவர் விரும்பும் சமுதாயமாக அன்பு, அருள், உண்மை, நேர்மை, ஊக்கம், உறுதி, அடக்கம், பணிவு, பிறருக்கு மதிப்பளித்தல் போன்றவை அறம் நிறைந்ததாகவே இருக்கும். பல அறங்களைக் கூறும் போது வள்ளுவர் அவற்றைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் மறுமைப் பயனையும் கூறியுள்ளார். அறத்தைக் கடைபிடிப்பதனால் ஒவ்வொருவரும் தமக்கும் பிறர்க்கும் இம்மையில் விளைவிக்கும் நற்பயனையும் கூறுகிறார். அறம் யாவர்க்கும் உரியது. அறம் செய்யலாம் என நாள்தோறும் சிந்தித்து, மேலும் மேலும் முயலத்தக்க வகையிலேயே வள்ளுவர் அறம் பற்றிக் கூறியுள்ளார். வள்ளுவர் அறத்தை இல்லறம், துறவறம் என இரு இயலில் எழுதியுள்ளார். இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு என்பவை இல்லறத்திற்கே உரியன. இல்லறத்தாரிடமே இடம், பொருள், ஏவல் முதலியன சிறந்திருக்கும். ஆகையால் அவர்களே விருந்தோம்பலுக்கும் அதிக வாய்ப்புடையவர்கள். இருப்பினும், துறவியர்கள் தங்களிடம் இருப்பதைக் கொண்டு விருந்தோம்புதலால் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி நல்வழிப்படுத்துவர். உள்ளத்திலிருந்தே அறமனைத்தும் தோன்றும் என்பதை உணர்ந்தே வள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற" -34

என்றார். வரைவிலக்கணம் கூற முடியாத அறத்திற்கு வள்ளுவர் சில சொற்களால் மிகச் சீரிய முறையில் இலக்கணம் கூறியுள்ளார். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்" அதாவது எந்தளவிற்கு உள்ளத்தில் எண்ணங்கள் தூய்மையாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு அறமும் வாழ்வில் ஏற்படும் என்பது குறளின் பொருள். உள்ளத்தூய்மை என்பது தூய்மையான எண்ணங்களைக் குறிக்கும். தூய்மையான எண்ணங்கள் தூய்மையான சொல்லாகவும் மாறுகின்றன. எனவே அறச்செயல்களுக்கு அடிப்படை மனத்தூய்மையே என்பதை மிகத் தெளிவாக அறிய முடிகிறது. மனம் மாசு

அற்றதாய் இருந்தால் மற்ற மாசு எதுவும் தோன்றாது.

"மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி" - 453

"மனம்தூயர்க்கு) எச்சம் நன்றாகும்" - 456

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்"-457

"மனநலத்தின் ஆகும் மறுமை" - 459

இத்தகைய குறள் வரிகள் அனைத்துமே மனத்தூய்மைதான் அனைத்து அறத்திற்கும் அடிப்படை என உரைக்கிறது. எனவே தூய்மையான அல்லது அழுக்கற்ற உள்ளத்தின் தேவையை அழுத்தமாகப் பதிவு செய்யக் காரணம் நீதியை வலியுறுத்தும் பனுவலாகும். உள்ளம்தான் மனிதனது அனைத்து நடத்தைகளுக்கும் காரணம் என்பதை நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. மேலும் ஈகை குறித்து,

"வறியார்க்கொனறு ஈவதே ஈகைமற்
றெல்லாம்

"குறியெதிர்ப்பை நீர(து) உடைத்து-221

"அற்றார் அழிபசி தீர்த்தல்" - 226

"தக்கார்க்கு ஒன்று ஈதல்" - 1006

போன்ற குறள்கள் செல்வத்தைப் பெற்றுள்ள ஒருவன் அதன்மீது அதீத பற்றுக்கொண்டு பிறருக்குக் கொடுத்து உதவாமல் இருக்கக் கூடாது என்பதைப் பொதுப்படையான கருத்தாக உரைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**அன்பும் அருளும்:**

அன்பு அனைவரிடத்திலும் இருக்க வேண்டிய பண்பு. அன்பைத் தந்தாலும் இன்பம் பெற்றாலும் இன்பம் எல்லா அறங்களுக்கும் அடிப்படையானது. அன்பைத் தாழிட்டு அடைத்தல் இயலாது என்பதை வள்ளுவம் "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் என்கிறது. அன்புடையார் தன்னலத்தைவிட பொது நலத்தையே நாடுவர். இல்லறம் நல்லறமாக விளங்கிட அன்பே அடிப்படை. திருக்குறளில் அறத்துப்பாலில் எட்டாம் அதிகாரத்தில் பத்துப்பாடல்களும் அன்பின் சிறப்பை வலியுறுத்துகின்றன.

"அன்புற்(று) அமர்ந்த வழக்கென்ப
வையகத்(து)
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு" - 75

எனும் குறளில் அன்பு செலுத்தி வாழும் வாழ்க்கையே இன்புற்று வாழும் சிறந்த வாழ்க்கை என்றும், உள்ளத்தில் அன்பில்லாது வாழும் வாழ்க்கை வறண்ட பாலைவனத்தில் முளைவிட்டுத் துளிர்த்த பட்ட மரத்தைப் போன்றதாகும். உலக மக்கள் அனைவரும் அன்பு வலையில் அகப்பட்டு வாழ்ந்தால் இவ்வுலகம் இன்புற்றுச் சிறக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும் தமிழர்களின் பண்புகளில் குறிப்பிடத்தக்கது விருந்தோம்பல். விருந்து என்னும் சொல்லுக்குப் 'புதுமை' என்று பொருள். விருந்து போற்றுவாருக்கு முகமலர்ச்சி தேவை என்பதை,

"இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம்
விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"-81

என்கின்றது. அதாவது இல்வாழ்வில் செல்வம் சேர்த்து வாழ்தல் விருந்தினரைப் போற்றிப் பாதுகாப்பதோடு பிறருக்கு உதவி செய்வதற்குத்தான் என்கிறார்.

"மோப்பக் குழையும் அனிச்சம்
முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"- 90

எனும் குறளில் அனிச்ச மலரை மூக்கின் அருகில் வைத்து முகர்ந்தால்தான் வாடும். ஆனால் விருந்தினரை மகிழ்வற்றுப் பார்த்தாலே வாடி விடுவர் என்கிறார் வள்ளுவர். மேலும் அன்பும் அருளும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுபவையே. அன்புடையர், அன்பிலாதவர் என்ற பாகுபாடு

கிடையாது. தொடர்புடையோரிடத்தும் தொடர்பிலாரிடத்தும் ஏற்படும் அருளானது நெருங்கிப் பழக அன்பாக நட்பாக மாறுகிறது.

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு" - 757

என்றும்,

"அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்" -285

ஆகிய குறள்கள் இதை விளக்கும். மேலும் அன்பும் அருளும் இல்லத்திலும் அறச்செயல்களிலும் மட்டுமன்றி, போரிலும் அரசியலிலும் கூடக் கடைப்பிடிக்க வேண்டியவை போரில் ஒரு துன்பம் நேர்ந்துவிட்டால் அருள் கொண்டு உதவ வேண்டும்.

"அறத்திற்கே அன்புசார் என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" - 76

அறச்செயல்களைச் செய்வதற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று அறியாதவர்கள் கூறுவர். பாவச் செயல்களை அழிப்பதற்கும் அவ்வன்பு துணையாக வரும் என்று விளக்குகின்றார்.

"புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் அன்பி லவர்க்கு"-79

உடம்பின் அகத்த உறுப்பாகிய அன்பு இல்லாதவருக்கு உடம்பின் புறத்து உறுப்புகள் எல்லாம் என்ன பயன் செய்யும் என்கிறது குறள். ஒருவன் உள்ளத்தில் அன்பு இல்லை என்றால் கண் இருந்தும் குருடனாய், காதிருந்தும் செவிடனாய், கை இருந்தும் முடவனாய், வாய் இருந்தும் ஊமையாய் எனப் புறத்துறுப்பெல்லாம் என்ன செய்யும் என்பது குறளின் விரிவான பொருளாகும்.

**உண்மையும் நேர்மையும்:**

பகைவரிடத்தும் நண்பரிடத்தும் பிறரிடத்தும் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும், நேர்மை தவறுவதனால் பொருள் பெறும் வாய்ப்பு ஒன்று ஏற்பட்டால் அதை அப்பொழுதே விட்டுவிட வேண்டுமென்றும், வறுமை காரணமாகவோ, செல்வம் காரணமாகவோ அதை ஏற்றுக் கொள்ளாதிருப்பது சான்றோர்க்கனி எனவும் வள்ளுவர் பொதுப்படக் கூறியுள்ளார். மக்கள் வறுமைத் துன்பத்தைப் போக்க எண்ணித் தவறு செய்தல் கூடும். செல்வர்கள் தம் செல்வத்தினாலும் செல்வாக்கினாலும் செய்த தவற்றை மறைக்கலாமென எண்ணியும் தவறிழைக்கக் கூடும். இரண்டையும் விலக்கி எந்நிலையிலும் நேர்மை தவறாது வாழ வேண்டும் என்றார்.

"தன்னெஞ்சு அறிவது பொய்யற்க் பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்" - 293

என்றும், உண்மை பேசுதல் வேண்டும். உண்மையானவற்றைப் பேசுவது மட்டுமல்ல, நன்மையாதைப் பேசுவதும், எந்த உயிருக்கும் சிறிய தீங்கும் இல்லாத சொற்களைச் சொல்லுதலும் வாய்மையாகும். இதனை,

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்" - 291

என்றும்,

"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை"-295

என்ற குறள்களில் பேச்சில் வாய்மையைக் கடைபிடிக்க வேண்டுமெனக் கூறிய வள்ளுவர் எல்லாவற்றிலும் உண்மையை ஆராய்ந்தறிய வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். ஒருவன் தன் உள்ளம் அறிய உண்மை பேசி வாழ்ந்தால், அவன் தவத்தோடு கூடிய

தானமும் செய்தவரை விட பெருமை அடைவான் என்று வாய்மையின் மேன்மையை விளக்குகிறது. உலக வாழ்க்கையில் ஈடுபடுவோர்க்கும், அரசியலில் ஈடுபடுவோர்க்கும், தத்துவ ஆய்வு, சமய நூல், கல்வி போன்றவற்றில் ஈடுபடுவோர்க்கும் இவ்வியல்பு வேண்டும். மேலும்,

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"-423

அதாவது நண்பரோ, பகைவரோ, கற்றோரோ, கல்லாதவரோ யாராக இருப்பினும் அவர் கூறுவதை ஆராய்ந்து உண்மையை அறிதல் வேண்டும் என்கிறார். மேலும் நா நலம் என்னும் சொல் வன்மை சிறந்த செல்வ அறமாகும். நா உடம்பில் சிறு உறுப்பு. அது செய்யும் செயல் மிகப்பெரியது. நாவால் ஒருவரை வாழ்த்தலாம். ஒருவரைத் தூற்றலாம். மெய்யுரையும், பொய்யுரையும் நாவிலிருந்தே வரும். நாவு நெருப்புக்குச் சமமானது. அதைக் கவனமாகக் கையாள வேண்டும். வள்ளுவர் நாவைப் பற்றிக் கூறும்போது, ஒருவர் தம் நாவினால் பேசும் பேச்சுதான் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் வழிவகுக்கின்றது.

**ஊக்கமும் உறுதியும்:-**

சமுதாயத்தில் போதிய வாய்ப்புகள் இல்லாவிடின், எவ்வளவு ஊக்கமும் முயற்சியும் இருப்பினும் ஒருவன் தான் எய்த முயன்ற குறிக்கோளை எய்த முடியாது. மக்கள் உயர்ந்த குறிக்கோளை உள்ளத்திற்குக் கொண்டு முயல வேண்டும். அம்முயற்சி தோற்றலும், உயர் குறிக்கோள் அல்லது கருத்துக்களைக் கைவிடுதல் கூடாது. ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை என்னும் நான்கு அதிகாரங்களிலும் அதிகமாக வற்புறுத்தப்படுகின்றன. இவை அரசியலில் வருவதால் இப்பண்புகள் சமுதாயத்தில் சிறப்பாகப் பொறுப்புள்ள நிலையில் உள்ளோர்க்கு வேண்டப்படுவன எனக் கொள்ளலாம்.

"ஆள்வினையும் ஆன்ற அறிவும்என
இரண்டின்
நீள்வினையான் நீளும் குடி" - 1022

என ஒழிபியலில் குடிசெயல் வகையுள்ளும் கூறப்பட்டது. ஊக்கமும், முயற்சியும் குடிமக்கள் யாவர்க்கும் தத்தம் தொழில்களில் வேண்டப்படுவனவே.

"வெள்ளத்து அனைய மலர் நீட்டம்
மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு" - 595

நீர் பூக்களில் உள்ள தண்டின் நீளம் அப்பூக்கள் மலரும் நீர் நிலையில் நின்ற நீரின் அளவாக இருக்கும். நீர் மட்டத்தின் மேலே மலர் பூப்பதால் நீரின் அளவிற்குத் தண்டு உயர்கிறது.

யானையின் உடம்பில் பல அம்புகள் தைத்திருப்பினும், அது தன் பெருமை குறையாது வீறுடன் நிற்கும், அதுபோல ஊக்கமுடையோரும் தம் முயற்சிக்குச் சிதைவு ஏற்பட்டபோதும் தளராது மேலும் முயல்வர். முயற்சியுடையோரே பிறருக்கு உதவுவர். போதிய வாய்ப்புகள் இல்லாநிலையிலும் முயற்சி ஓரளவு பயனைத் தரும். ஆகவே மிக முயற்சியுடையோர் வேறு சூழ்நிலைகளிலும் முயற்சியை வெல்வர்.

**அடக்கமும் பணிவும்**

அடக்கம் என்பதற்குப் பல வகையாகப் பொருள் கொள்ளுதல் கூடும். செயலில், பேச்சில், உள்ளத்து உணர்ச்சிகளில், எண்ணங்களில் கூட அடக்கத்தைக் கடைப்பிடித்தல் கூடும். செருக்கின்றிப் பணிவுடன் நடந்து கொள்ளுதலையும் அடக்கம் என்பர். ஐம்புலன் ஆசைவழி மனத்தைச் செல்லவிடாது தடுத்தலைப் புலனடக்கம் என்பர். பேச்சில் கடுஞ்சொல்லின்றிக் கனிவுடன் பேசுதலை அடக்கம் என்பர். உள்ளத்தில் சினம்

தோன்றாது காத்தலும் அடக்கமாகும். இவையனைத்தையும் வள்ளுவர் அடக்கம் என்ற தலைப்பின் கீழ்க் கொண்டார். "யாகாவராயினும் நாகாக்க" என வள்ளுவர் நாவடக்கத்தின் அவசியத்தைக் கூறினார்.

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"-127

எனும் குறள் மூலம் தீய சொற்களால் பழிவந்து துன்பப்படுவர் என்கிறார். ஒருவன் பேசுவது வாயினால் தான். வாயினுள் இருக்கும் நாவு இல்லையென்றாலும், நாவைப் பிடித்துக் கொண்டாலும் பேச இயலாது. பேசும் சொற்களில் ஒரு சொல் தீய பொருளைத் தந்தால், செய்த மற்ற நன்மைகள் யாவும் கெட்டு விடும். ஆதலால் நல்வற்றையே பேசுவோம். நாவினை அடக்கி வாழ்வது சாலச் சிறந்தது என்கிறார்.

ஒருவனுடைய சொல் ஒன்று தீங்கு பயப்பதாக இருக்குமாயின், அவன் செய்யும் பிற அறங்கள் நன்றாகாதன ஆகிவிடும். தீயினால் சுட்டப் புண்ணும் ஆறும், ஆனால் ஒருவன் கூறும் கடுஞ் சொல்லானது உள்ளத்தில் வடுவாக மாறிவிடும் ஆறாது. கடும் சொல்லைப் பிறர் எளிதில் மறப்பதில்லை. ஆகவே சொல்லில் அடக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது சமூக வாழ்க்கையில் மிக அவசியம். உள்ளத்தில் தோன்றும் சினத்தினால் வாயினின்று கடுஞ்சொல் தோன்றுகிறது. உள்ளத்தில் சினம் ஏற்படாதவாறு ஒருவன் காத்துக் கொள்வானேயாகில் அவன் கடுஞ்சொல்லும் பேசான். எத்தகைய தீங்கையும் பிறருக்குச் செய்யான். கற்ற அறிவுடையவன் உள்ளத்தில் சினம் ஏற்படாது. ஒழுக்கமுடைமை குறளில் மற்றொரு பண்பு, ஒருவன் பல நூல்களைக் கற்றானாயினும், உயர்ந்த ஒழுக்கத்தை நோக்கி அதற்கேற்ப ஒழுகுதலே சிறப்பாகும் என்று கூறுகிறார். எனவே அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிப் பாதுகாக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை என்பதை,

"காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு"- 122

என்றும்,

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு புடைத்து" - 126

ஒரு பிறவியில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கி ஆள வல்லவனுக்கு அது பல பிறப்புக்கும் நன்மையை விளைவிக்கும். இதுபோன்று பலவகையான அடக்கத்தின் சிறப்பை வள்ளுவம் எடுத்துரைக்கிறது. மனித மனம் இயல்பாகப் பெற்றுள்ள அடக்கமின்மை எனும் மனவெழுச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை அழுத்தமாகப் பதிவு செய்கின்றன. மேலும் இவற்றோடு தொடர்புடையது பணிவு. இப்பணிவு இன்சொல்லோடு தொடர்புடையது. தற்பெருமையின்றிப் பணிவோடு கூடிய சொற்களே பிறர்க்கு இன்பம் பயக்கும். பணிவு சொல்லிலும் தோன்றும். பெரியோரிடத்துக் கைகூப்புதல், தலை தாழ்த்தி வணங்குதல் முதலிய செயல்களின் மூலம் புலனாகும். உள்ளத்தில் பெருமிதமற்ற பணிவே சொல்லிலும் செயலிலும் பணிவைத் தோற்றுவிக்கிறது. பணிவு அல்லது தாழ்மை என்பது திருக்குறளின் ஓரதிகாரத்தின் தலைப்பாக அமையாவிடினும் இவ்வியல்பும் பன்முறை போற்றப்படுகிறது. இன்சொல்லும் பணிவும் யார்க்கும் அழகு அளிப்பன எனக் கருதியே

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற" - 95

என வள்ளுவர் கூறுகிறார். சமுதாயத்தில் தம்மைவிட உயர் நிலையில் உள்ளோரிடமும்

ஒத்த நிலையில் உள்ளோரிடமும் பணிவு காண்பித்தல் இயல்பு. மேலும் நண்பரிடமும், தனக்கு நலஞ் செய்வோரிடமும் பணிவுடன் பழகுதல் உண்டு. ஆனால் சான்றோர்கள் பகைவரிடமும் பணிவுடன் நடந்து கொள்வர். அப்பணிவே பகையை மறக்கவும் செய்யும் என்பதை,

"ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர்
மாற்றாரை மாற்றும் படை" -985

என்ற குறளின் மூலம் கூறுகிறார். ஆகவே பகைவரிடமும் பணிவுடன் நடந்து கொள்வதே விரும்பத்தக்கதாகும் என்ற கருத்தை வள்ளுவர் மிகவும் அழகாகக் கூறுகிறார்.

**உள்ளத்தில் அகற்றக் கூடியவை:-**

வள்ளுவர் அழுக்காறாமை எனும் அதிகாரத்தில் பொறாமையால் ஏற்படக்கூடிய தீமைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். தனக்கு அறமும் ஆக்கமும் வேண்டும் என விரும்பாதவனே பிறருடைய ஆக்கத்தைக் கண்டு மகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.

"அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான்" - 163

பொறாமைக் கண்ணோடு பார்ப்பவர், தான் வறியவராகப் போவதை அறியாமல் மனதில் உள்ள பொறாமை என்னும் அழுக்கால் அவரவருக்கே தீமை ஏற்படும் என்பதைத் தெளிவாக உரைக்கின்றது. மேலும் நடுவுநிலைமை இல்லாமல் பிறருடைய நல்ல பொருள்களை ஒருவன் திருட விரும்பினால் தன்னுடைய குடியும் கெட்டு, குற்றமும் வந்து சேரும் என்பது திருக்குறளில் அறம் உரைக்கும் போக்காக அமைந்துள்ளது. திருட்டு என்னும் முறையற்ற செயலைக் கண்டிக்கும் விதத்திலும் அதனால் வரக்கூடிய தீங்கையும் குறிப்பிட்டுள்ளது. மேலும் உள்ளத்தில் தோன்றும் வெப்பக் கொதிப்பாகிய சினம் என்னும் உணர்வு, அன்பு, அடக்கம், பொறுமை, அறிவு போன்ற அனைத்தையும் குலைத்து பழி பாவத்திற்கு ஆளாக்கிவிடும். எனவே, அத்தகைய சினத்தைக் காக்க வேண்டியதன் அவசியத்தை வள்ளுவம் உணர்த்துகிறது.

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்" - 305

ஒருவன் தன்னைக் காத்துக்கொள்ள வேண்டுமெனில் முதலில் தனக்குக் கோபம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையெனில் அது தன்னையே அழித்து பல தீமைகளை உண்டாக்கும் என உரைத்துள்ளது. மேலும் உண்மையான அன்பு இல்லாமல் பொருளுக்காகப் பொய்யான அன்பு காட்டும் மகளிர் ஆபத்தானவர்கள். அவர்களை அணுகக் கூடாது எனக் கூறும் நிலையை,

"அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியர்
இன்சொல் இழுக்குத் தரும்" - 911

அன்பினால் விரும்பாமல் பொருள் காரணமாக விரும்புகின்ற பொதுமகளிர் பேசுகின்ற இனிய சொல் ஒருவனுக்கு துன்பம் கொடுக்கும் என்று வள்ளுவர் கூறுகிறார். மேலும் போதை தரும் குடிப்பழக்கத்திற்கு ஒருவர் அடிமையானால் அது அவருடைய நடத்தையையும் சமூக அங்கீகாரத்தையும் கெடுக்கும். இந்தப் பழக்கத்தை ஒருவர் கைவிட வேண்டும் என்ற நீதியை உரைத்துள்ளது.

"உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்"-927

கள்ளை மறைத்துக் குடித்து அறிவு இழப்பவர் உள்ளூரிலே வாழ்கின்ற மக்களால் கண்டறிந்து நகைப்பிற்கு ஆட்படுவர். எனவே

கள்ளுண்ணாமையைத் தவிர்த்தல் வேண்டுமென்றும், பிற ஒழுக்க நெறிகளைப் போதிப்பதைப் போலவே குடிப் பழக்கத்தினால் ஏற்படும் தீங்கையும் அகற்ற வேண்டுமெனத் தெளிவுபடுத்துகின்றது.

### அறம் மாற்றம் அற்றது

சமுதாயத்தை வளப்படுத்தத்தக்க அறங்கள் பல வருத்துரைக்கப்பட்டுள்ளன. அறத்தின் பொதுவான இயல்புகளான வாய்மை, கொல்லாமை போன்ற குறிப்பிட்ட அறத்தைக் கடைப்பிடிப்பவரின் நிலைமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுதல் இருக்கக் கூடும் என்பதை,

"பொய்ம்மையும் வாய்மை இடத்த
புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" - 292

என்றும்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை
மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று" - 323

எல்லாவற்றிலும் சிறந்தது அறம். அது எந்த உயிரையும் கொல்லாது. அதுவே சிறந்த அறம்.

"பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு" - 963

இவ்வாறு குறிப்பிட்ட ஒரு அறத்தைக் கடைப்பிடிக்கும் முறை சூழ்நிலைக்குத்தக்க மாறக் கூடுமேயன்றி, காலந்தோறும் இடந்தோறும் மக்கள் கருத்திற்கேற்ப மாறும் என்ற கருத்தை வள்ளுவர் குறிப்பிட்டதில்லை. எனவே அறம் அவரவர் கருத்துப்படி வேறுபடாது யாவர்க்கும் பொதுவானதாக இருக்கும்.

### அறத்தின் தூண்டல்:-

மக்கள் அறத்தைக் கடைப்பிடிக்கும்படியும் அறத்திற்கு மாறானவற்றைச் செய்யாதிருக்கும் படியும் தூண்டுவது அறிவு, உணர்ச்சி, அன்பு என்று கருதியே வள்ளுவர் அன்புடைமை, அருளுடைமை என்னும் அதிகாரங்களை எழுதியுள்ளார்.

"தெருளாதான் மெய்ப்பொருள்
கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்" 249

என்ற குறளில் அருள் உணர்ச்சி இல்லாதவன் அறம் செய்தல் கூடாது என்று கூறப்படுகிறது. ஆனால் அறம் செய்ய மக்களை உந்துதலில் அறிவின் பங்கு பற்றி,

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு" - 422

என்ற குறளில் மக்களைத் தீதினின்று விலக்கி, நன்னெறியில் கொண்டு செல்லும் அறிவின் ஆற்றலை விளக்கினார். பகுத்தறிவினால் ஒருவன் தம் செயலின் மூலம் நன்மை விளையுமா? தீமை விளையுமா? ஒருகால் முதலில் நன்மை போல் தோன்றினும் இறுதியில் தீமை பயக்குமா என்றெல்லாம் சிந்தித்துத் தீயதை நீக்கி நல்லதைத் தேர்ந்தெடுக்கிறான்.

"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்" 203

இந்தக் குறள் அறத்தைச் செய்யும்படி தூண்டுவதில் அல்லது அறமல்லாதவற்றைச் செய்யாதபடி விலக்குவதில் அறிவின் பங்கு பற்றிக் கூறுகின்றன. ஆகவே திருக்குறளின்படி உள்ளத்தின் திறன்களாகிய உணர்ச்சி, அறிவு, கற்பனையாற்றல், மன உறுதி அனைத்தும் மக்களை அறவழியில் நடத்துவதில் பயன்படுகின்றன. இக்கருத்தைத் தற்கால சமூகவியல் அறிஞர்களும், உளவியல் அறிஞர்களுங்கூட ஆமோதிக்கின்றனர்.

### முடிவுரை:

இல்லற வாழ்க்கையிலும், துறவு வாழ்க்கையிலும் அறமே சிறந்தது. அறங்களால் சமுதாயத்திற்கு நன்மை

செய்யவும், உண்மையாகவும், நேர்மையாகவும், ஊக்க உறுதியுடனும், மற்றவருக்குப் பணிந்து மதிப்பளித்தலும் அறம் என வள்ளுவர் கூறுகிறார்.

**"தோன்றின் புகழொடு தோன்றுக**
**அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"- 236**

என்ற குறட்பாவில் தெளிவுபடுத்தியுள்ளார். அதாவது பிறப்புக்கும் இறப்புக்கும் நடுவே இருக்கின்ற இடைப்பட்டக் காலத்தை நல்ல முறையில் வாழ்ந்து காட்ட வேண்டும் என விரும்புகிறார் வள்ளுவர். எனவே

அறத்தை ஓரளவாவது நற்செயல்களுடன் விட்டுவிடாமல், எவ்வகைகளிலெல்லாம் செய்ய இயலுமோ அவ்வழிகளிலெல்லாம் செய்ய வேண்டும் என்ற கருத்தை வள்ளுவர் விரும்புகிறார். எனவே மனிதர்கள் அறவழியில் வழிநடத்த வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் பல கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு புலப்படுத்தப்படுகிறது. உலகம் போற்றும் குறள் ஒவ்வொருவரின் வாழ்க்கை வழிகாட்டிகள். அவை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கோ, மதத்திற்கோ, மொழியினருக்கோ எழுதப்படவில்லை. உலகில் உள்ள அனைவருக்கும் பொதுவாக எழுதப்பட்ட சிறந்த நூலாகும். அவற்றைக் கற்பது மட்டுமல்ல, நல்லறங்களை வாழ்க்கையில் பின்பற்றி வாழ வேண்டுமென்று வலியுறுத்துகிறது.

௸